**cross**

**O.S.No. 8/2020**

**Date:03.09.2025**

**பி.வா.சா.1 பிரபாகரன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிராதை படித்து பார்த்து தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முழு தகவலும் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். மேற்படி எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு எனது தாயார் எதுவும் சொல்லவில்லை. பிராது தபசில் சொத்தில் உள்ள 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களுக்கும் வாதிகள் குறிப்பிட்டுள்ள பழைய சர்வே எண். பழைய விஸ்தீரணம் புதிய சர்வே எண். புதிய விஸ்தீரணம் ஆகியவை சரியானைவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.ஆ 2 க்கு பிறகு தான் பாகபத்திரத்திற்கு பின்புதான் பிராது 1 ம் தபசில் கண்ட 6 அயிட்ட சொத்துக்களும் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அதனால் பிராது 1 ம் தபசில் கண்ட 6 அயிட்ட சொத்துக்களும் பி.வா.ஆ.2 த்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். பி.வா.ஆ.2 பாகபத்திரத்தில் பிராது 2 ம் தபசில் சொத்து என் தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் சிவசுப்பிரமணிய நாடாரும் 2 ம் வாதியின் தகப்பனார் ராமசாமி நாடாரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு ராமசாமி நாடாரை தவிர்த்து நாகராஜன், ராகவன், ஜெயசீலன், பார்த்த சாரதி ஆகியோர்கள் சகோதரர்கள் ஆவார்கள். மேற்படி நாகராஜன், ராகவன், ஜெயசீலன், பார்த்த சாரதி ஆகியோர்கள் சகோதரர்கள் பி.வா.சா.ஆ 2 பாகப்பிரிவினைக்கு பின்பு தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

நாகராஜன், ராகவன், ஜெயசீலன், பார்த்த சாரதி ஆகியோர்கள் சகோதரர்கள் மேற்படி பாகப்பிரிவினைக்கு பிறகு எனது அப்பாவுடன் சேர்ந்து சொத்துக்கள் எதுவும் கிரையம் வாங்கவில்லை. மேற்படி பிராது 1ம் தபசில் 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களுக்கும் நாகராஜன், ராகவன், ஜெயசீலன், பார்த்த சாரதி ஆகியோர்கள்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆகையால் நாகராஜன், ராகவன், ஜெயசீலன், பார்த்த சாரதி ஆகியோர்கள் பிராது 1ம் தபசில் சொத்திற்கு அவசிய கட்சிக்காரர்கள் இல்லை என்றால் சரிதான். பிராது 1ம் தபசில் கண்ட 1ம் அயிட்ட சொத்து 20.01.1960ம் தேதிய கிரைய பத்திரம், 1ம் தபசில் கண்ட 2ம் அயிட்ட சொத்து 26.09.1960ம் தேதிய கிரைய பத்திரம் மூலமாகவும் 1ம் தபசில் கண்ட 3ம் அயிட்ட சொத்து 22.06.1960ம் தேதிய கிரைய பத்திரம் மூலமாகவும் இராமசாமி நாடார் எனது அப்பாவும் சேர்த்து கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய காலத்தில் நான் பிறக்கவில்லை. மேற்படி கிரையங்களுக்கு சமபங்கு செலவு செய்து கிரையம் பெற்றார்களா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எனது தகப்பனார் மேற்படி கிரையங்களுக்கு யார்யார் எவ்வளவும் பணம் கொடுத்தார்கள் என்று சொல்லிக்கொள்ளவில்லை. 1ம் தபசில் கண்ட 4ம் அயிட்ட சொத்து 10.05.1968 கிரைய பத்திரம் மூலமாகவும், 1ம் தபசில் கண்ட 5ம் அயிட்ட சொத்து 14.09.1968 கிரைய பத்திரம் மூலமாகவும் வழக்கின் 1ம் வாதி யோகமணியம்மாள் பெயரிலும் எனது பெயரிலும் கூட்டாக கிரையம் பெறப்பட்டது. இந்த 2 கிரையம் வாங்கும் போது நான் மைனராக இருந்தேன். இந்த கிரையம் பெறும் போதும் யார் யார் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. 1ம் தபசில் கண்ட 6ம் அயிட்ட சொத்து கிரைய பத்திரம் 07.11.1968ல் எனது தகப்பனாரும் ராமசாமி நாடாரும் சேர்ந்து கூட்டாக கிரையம் பெற்றார்கள் அந்த கிரையத்தின் போது நான் மைனராக இருந்தேன்.

இந்த கிரையம் பெறும் போதும் யார் யார் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. 1ம் தபசில் கண்ட 1 முதல் 6ம் அயிட்ட சொத்துக்களை கிரைய பெற்ற பிறகு எனது தகப்பனாரும் ராமசாமி நாடாரும் சேர்ந்து கூட்டாக கிரையம் பெற்று பொதுவாக அனுபவித்து வந்தார்களா என்றால் கிரையம் பெற்ற உடனே பிரித்துக் கொண்டார்கள். ஆகையால் 1972ல் மேற்படி சொத்துக்களை எனது தகப்பனாரும் ராமசாமி நாடாரும் வாய்மொழியாக பிரிவினை செய்து கொண்டதாக நான் எதிர்உரையில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.